மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 9

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஜுலை 2011

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2011 ஜுலை**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

நாகூம் 1 : 13 **உன் கட்டுகளை அறுப்பேன்.**

**உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்.**







SLVGM 15வது ஆண்டு நிறைவுவிழாவின்போது SLVGM காரியதரிசியின் மகன் **ஜாஷ்வா** அவர்களை, SLVGM ஸ்தாபகர் சகோ. P.T.**கிறிஸ்டோபர், பாஸ்டர் கைவல்யம் டேவிட் , பாஸ்டர் அந்தோணி D.சில், Rev. ஜான் ஐசாயா,சகோதரி டப்னி ஐசாயா** ஆகியோர் ஆசீர்வதித்து ஜெபித்தார்கள்.

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,**

தேவ சமாதானம் உண்டாவதாக!

கர்த்தருடைய கிருபையினால் நான் TVGM பொறுப்பேற்று 7 வருடங்களும், 28.5.2011 உடன் திருமணம் முடிந்து 1 வருடமும் நிறைவு பெற்றுள்ளது. ஜெபித்து வரும் ஒவ்வொருவருக்கும் நன்றி.

**2011** மே **6** வெள்ளி அன்று TVGM 25+7 = 32வது வருட நிறைவு ஸ்தோத்திர ஆராதனையில் **Elim Mission Director பாஸ்டர் விக்கி** மற்றும் **பாஸ்டர் செல்வின், சகோ. Tom** சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்கள். **100**–கிராம ஊழியர்கள், நாகர்கோவில் அறிமுகப்பணி யாளர்கள், குண்டல் சிறுவர் இல்லம் வார்டன்கள் மற்றும் பொறுப்பாளர் **சகோ. மனேகாரன்** குடும்பத்தினர் யாவரும் **32**வது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு தேவாதி தேவனைத் துதித்து மகிமைப்படுத்தினார்கள். மேலும் யாவரும் கொடைக்கானலுக்கு சுற்றுலா சென்று வர கர்த்தர் கிருபை செய்தார்.

பிரான்ஸ் தேசத்திலிருந்து **"கல்வாரி அன்பு சபை"** ஸ்தாபகரும், தலைமை போதகர் **விவேகானந்தன்** அவர்கள் மே 31 நடுஇரவு ஜெபத்தில் தேவசெய்தியளித்து, திருவிருந்தை நடத்தி வைத்தார்கள். மேலும் சூறாவளிப்பட்டி விதவைகள் , பஞ்சப்பூர் தொழுநோயாளர்கள், ஏர்போர்ட் பார்வையற்றோர் மற்றும் நமது சிறுவர் இல்லப் பிள்ளைகள் மத்தியிலும் தேவசெய்தி அளித்து உற்சாகப்படுத்தினார்கள்.

**பாஸ்டர் ராபின்சன்** ( *இயேசுவின் சமாதானம்* பத்திரிகை ஆசிரியர் – கோவை ) & அவரது துணைவியாரும் **2** நாட்கள் TVGM ல் தங்கியிருந்து **வாக்குத்தத்த செய்தியை** கொடுத்து விசுவாசத்தில் ஊக்குவித்தார்கள்.

**தேவனுக்கு மகிமை!**

கிறிஸ்துவின் பணியில்,
06.06.2011
**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

# உன் கட்டுகளை அறுப்பேன்.

நாகூம் 1 : 13

வாக்குத்தத்த செய்தி : **சகோ.** P.T. **கிறிஸ்டோபர்**

என் கட்டுகள் எப்பொழுது அவிழ்க்கப்படும் என அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் சகோதரியே, சகோதரனே, தேவஊழியரே!

இந்த ஜுலை மாதத்தில் தேவன் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் : **நாகூம் 1 : 13**

**உன் கட்டுகளை அறுப்பேன்.**

**நாகூம் 1 : 12, 13**ல் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் சம்பூரணமடைந்து அநேக ராயிருந்தாலும் அறுப்புண்டு போவார்கள்; அவன் ஒழிந்து போவான்; உன்னை நான் சிறுமைப்படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன்.

இப்பொழுதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, **உன் கட்டுகளை அறுப்பேன்.**

ஆம்! இது தான் உங்கள் பிரச்சனை: அவர்கள் சம்பூரண மடைந்து, அநேகராயிருக்கிறார்களே, நான் கர்த்தரைத் தேடியும் ஒரு பலனையும் காணவில்லையே? நான் தனித்து இருக்கிறேன், அவர்கள் அநேகராயிருக்கிறார்களே, என் கட்டுகள் எப்பொழுது அவிழ்க்கப்படும்?

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே! கலங்க வேண்டாம்.

**நீதி : 13 : 12** நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப் பண்ணும் ; விரும்பினது வரும்போதோ ஜீவ விருட்சம் போல் இருக்கும்.

வேதம் சொல்லுகிறது, அவர்கள் சம்பூரணமடைந்து, அநேகராயி ருந்தாலும் அறுப்புண்டு போவார்கள். அவன் ஒழிந்து போவான்.

**1யோவான் 4 : 4** உலகத்திலிருக் கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.

ஆதலால் தைரியமாகச் சொல்லுங்கள். **பிலிப்பியர் 4 : 13**

என்னைப் பெலப்படுத்துகிற
கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்
செய்ய எனக்குப் பெலனுண்டு.

**யோபு 13 : 15** அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையிருப்பேன்.

**தானியேல் 3 : 17** நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக் கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வது மில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது .

இப்படி நீங்களும் விசுவாசம் கொள்ளுங்கள். ஏனெனில் வேதம் சொல்கிறது:

**நாகூம் 1 :12** உன்னை நான் சிறுமைப்படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன்.

அதுமட்டுமா ?

இப்போதும் "**நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து உன் கட்டுகளை அறுப்பேன்**" என கர்த்தர் சொல்லுகிறார்.

**பக்தன் பாடுகிறார் :**

***நுகங்கள் முறிந்திடும்***
***கட்டுகள் அறுந்திடும்***
***விடுதலை பெருவிழா காண்போம்.***
***ஆனந்த துதி ஒலி கேட்கும்***
***ஆடல் பாடல் சத்தமும் தொனிக்கும்***
***ஆகாய விண்மீனாய் அவர் ஜனம் பெருகும்***
***ஆண்டவர் வாக்குப் பலிக்கும்.***

விசுவாசத்தோடே பாடுங்கள். விடுதலை பெருவிழா காண்பீர்கள். உங்கள் வாழ்க்கையில் ஆனந்த துதி ஒலி கேட்கும். ஆடல் பாடல் சத்தமும் தொனிக்கும். ஆத்துமாக்கள் பெருகுவார்கள். ஆமென்.

**உன் கட்டுகளை அறுப்பேன்.**

வேதத்தில் பலவிதமான கட்டுகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இன்று ஒரே ஒரு கட்டைப் பற்றி மட்டும் நாம் சிந்திப்போம்.

## பாவக்கட்டு

**நீதி. 5 : 22** துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக் கொள்ளும் ; தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான்.

துன்மார்க்கமாய் நடப்பவர்களை அவர்கள் செய்த அக்கிரமங்களே பிடித்துக் கொள்கிறது. அதுமட்டுமா, தன்னுடைய பாவக் கயிறுகளால் கட்டப் படுவான். நாம் செய்கிற பாவம் நம்மையே நல்ல பாம்பு காலை சுற்றிக் கொள்வதுபோல, நம்முடைய கால்கள் மட்டுமல்ல, நமது முழு உடலையே சுற்றி கொள்கிறது.

**எண். 32 : 23** உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்.

**எசேக்.18:20** பாவம் செய்கிற ஆத்துமா சாகும்.

ஆனாலும் **யோவான் 1 : 9** நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்தி கரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**யோவான் 1 : 7** இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே! நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். எந்தக் கட்டுகளாக இருந்தாலும், அடிப்படை காரணம் பாவமே. ஆதலால் தான் **1தீமோ.1:15** பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது.

### நற்செய்தி அல்லது சுவிசேஷம் என்றால் என்ன ?

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் ரத்தம் சிந்தி, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இந்த இயேசு இன்றும் ஜீவிக்கிறார். உலகத்திற்கு மீண்டும் வருகிறார். இந்த நற்செய்தி உலகமெங்கும் அறிவிக்கப் படவேண்டும். நம் தேசத்தில், நம் ஊரில், நம் தெருவில், நம் குடும்பத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

இதற்காக முதலாவது உங்கள் **கட்டுகள் அறுக்கப்பட வேண்டும்.**

**நீதி. 28 : 13** தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

இந்த வார்த்தையை வாசிக்கும் நண்பரே! நீங்கள் அவிசுவாசியாக இருக்கலாம் அல்லது விசுவாசியாக இருக்கலாம் அல்லது தேவ ஊழியராக இருக்கலாம் அல்லது ஸ்தாபனத்தின் தலைவராக இருக்கலாம் "**சத்தியம் சத்தியமே**". இயேசு சொன்னார் : **யோவான் 18:37** சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்.

பாவங்களை மறைக்கிறீர்களா? வாழ்வடையமாட்டீர்கள். தேவனிடம் அறிக்கை செய்து விட்டு விடுங்கள். நிச்சயமாக தேவ இரக்கம் பெறுவீர்கள்.

உங்கள் "**பாவக்கட்டுகளை அறுப்பேன்** " என தேவன் வாக்குக் கொடுக்கிறார்.

சீமோன் என்னும் மாயவித்தைக் காரன் பேதுருவிடம் பணத்தைக் கொண்டு வந்து, நான் எவன்மேல் கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். **அப்.8:23** பேதுரு அவனை நோக்கி : நீ கசப்பான பிச்சிலும், பாவக் கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்

ஆகையால் நீ உன் துர்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள். ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்.

ப ரி சு த் த ஆ வி யை பணத்தினால் பெற்று சம்பாத்தியம் பண்ணலாம் என்று வாஞ்சித்த மாய வித்தைக்காரனை நோக்கி பேதுரு கூறுகிறார்: **நீ கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டிருக் கிறதாக காண்கிறேன்** என்கிறார்.

மாயவித்தைக்காரன் கேட்டது "பரிசுத்தஆவியின் வரம் தான்".

ஆனால் பேதுரு அவனுக்குள் கண்டது கசப்பான பிச்சு, பாவக்கட்டு.

எனக்கன்பான விசுவாசியே, தேவஊழியரே, நீங்கள் கேட்கிற காரியம் நல்லது போல இருக்கும். அதற்குள்ளும் ஒரு தீயநோக்கம் உள்ளது.

கர்த்தருடைய வரத்தைத் தான் கேட்கிறீர்கள், எதற்காக? பெருமைக் காகவா? புகழுக்காகவா? மாயவித் தைக்காரன் பணத்தைக் கொடுத்து பரிசுத்தஆவியை வாங்க வாஞ்சித்தான்.

இருதயமே திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கிறது. நாமும் வஞ்சிக்கப்படாமல் தேவனுடைய கிருபைக்காக கெஞ்சுவோம்.

இயேசு கூறுகிறார் : **மத். 4:17** மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது.

தேவன் வாக்களிக்கிறார் :

**"உன் கட்டுகளை அறுபேன்"**

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**என் கட்டுகளை அறுத்துவிட்டீர்**
**என் கட்டுகளை அறுத்துவிட்டீர்**
**என் கட்டுகளை அறுத்துவிட்டீர்**

தேவஊழியரே பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள். **சங். 116 :16** கர்த்தாவே, நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயி ருக்கிறேன்; **என் கட்டுகளை அவிழ்த்து விட்டீர்.** ஆமென்!

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

# கன்னியாகுமரி மாவட்டம் - முஞ்சிறை யூனியன்
# 9வது "100 - கிராம ஊழியம்"

**<u>நோக்கம்:</u> 2011 ஜுலை 18** திங்கள் காலை 9 மணி முதல் **ஜுலை 22** வெள்ளி இரவு 10 மணி முடிய **முஞ்சிறை யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் :2011 ஜுலை 25** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2011 ஜுலை 29** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2011 ஜுலை 18 - 22 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. A.G. **சர்ச்,**
**கிராத்தூர்,**
**வழி : மார்த்தாண்டம், கொல்லங்கோடு,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
**செல்:** 94867 56384 ( பாஸ்டர் வில்சன் )

உதவி செய்ய முன் வந்த Pastor **வில்சன்** அவர்களுக்கு நன்றி!

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**<u>பிரயாணப்படி</u>** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**<u>முக்கிய அறிவிப்பு</u>** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**<u>சகல தொடர்புகளுக்கும்</u>** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. Ph : 0 - 431 - 2607241 , 94449 80445

# திருச்சி மாவட்டம் - முசிறி யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை



ஊழியம் நடைபெற்ற தேதி :
***02 . 05. 2011 முதல் 06. 05. 2011***

முதல்நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவி செய்தவர் :

**பாஸ்டர் டேவிட் J. பிரகாஷ்**
**ரிவைவல் சர்ச் , முசிறி.**

முதல் நாள் தேவசெய்தி கொடுத்தவர்:
**பாஸ்டர் டேவிட் J. பிரகாஷ்**

ஊழியம் செய்த கிராம ஊழியர்கள் & குழுக்கள் : 40 பேர், 10 **குழுக்கள்**
வழங்கப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் : 10,800 யோவான் சுவிசேஷங்கள்
இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள் : 10,000
மற்ற கைப்பிரதிகள் : 5000
சிலுவைக்கொடிகள் : 10,000
புறமதநண்பர்களின் விலாசங்கள் : 182

இந்த ஊழியத்தின் கடைசிநாள் ஜெபத்தில் நியூசிலாந்து தேசத்திலிருந்து **பாஸ்டர் விக்கி, பாஸ்டர் செல்வின், சகோ. Tom** ஆகியோர் கலந்து கொண்டு, கிராம ஊழியர்களின் ஊழிய அனுபவ சாட்சிகளை கேட்டு தேவனைத் துதித்தார்கள். கிராம ஊழியர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபித்தார்கள். **பாஸ்டர் விக்கி** அவர்கள் தேவசெய்தியளித்தார்கள்.

**ஊழியக் குழுவினர் வழங்கிய சுவிசேஷப்புத்தகங்கள் & சிலுவைக்கொடிகள்**

குழு 1 - சகோதரிகள் : **பிச்சையம்மாள், எஸ்தர் சாலமோன், தேவபாக்கியம்,கிளமெண்ட்ஸ்மேரி, எஸ்தர் எபிநேசர்.**
1100 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 2 - சகோதரிகள் : **ரூத் கலா, மணியம்மாள், தேவகிருபை, ரெபேக்காலட்சுமி.** 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 3 - சகோதரர்கள் : **யோசுவா, டேவிட் செல்வராஜ், செல்வராஜ்.**
1100 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 4 - சகோதரர்கள் : **இஸ்ரவேல், ஜெபமலைநாதன், மகாராஜன், பீட்டர் ராமலிங்கம்.** 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 5 - சகோதரர்கள் : **பால்ராஜ், சூசைமாணிக்கம், அந்தோணி.**
1050 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 6 - சகோதரர்கள் : **பிரேம் ஆனந்த், சாமுவேல் மாசிலாமணி, இம்மானுவேல்.** 850 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

குழு 7 - சகோதரிகள் : **லூாயிஸ், அபியேல் அந்தோணியம்மாள், தெபோராள், மார்கிரேட்.** 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்
குழு 8 - சகோதரிகள் : **எஸ்தர் கனகாம்புஜம், செல்லக்கனி, ஜெபஞானம், செல்லம்மாள்.** 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்
குழு 9 - சகோதரிகள் : **லூர்துமேரி, சலோமி சம்மனசு, அன்பு ராஜாத்தி, ரூபி ஜெயந்தி.** 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்
குழு 10 - சகோதரிகள் : **அமிர்தம், அந்தோணிமேரி, சீலா, மரியாள், கிருபா பழனியம்மாள்.** 1800 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள்

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள் சில

**அய்யம்பாளையம்** கிராமத்தில் புத்திசுவாதீனம் இல்லாத ஒரு பெண்ணின் குடும்பத்தினருக்கு இயேசுவைப் பற்றி கூறி அந்தப் பெண்ணுக்காக ஜெபிக்கிறோம் என்றோம். அப்பெண்ணின் தம்பி வேண்டாம், இதெற்கெல்லாம் எங்கள் சாமி சம்மதிக்காது என்றான். அதற்கு நாங்கள் உங்கள் சாமி இந்தப் பெண்ணுக்கு இத்தனை வருடங்களாக சுகத்தைக் கொடுக்கவில்லையே என்று சொல்லி எங்கள் சாட்சிகளைக் கூறி ஜெப எண்ணெய்ப் பூசி பாரத்தோடு ஜெபித்தோம். பிறகு அவளின் தம்பி என் அக்கா குணமானால் நாங்கள் இயேசுவை தொழுதுகொள்வோம் , இயேசு சுகமாக்கினார் என்று சாட்சியும் சொல்லுவோம் என்றார்.

**பெரிய கொடுந்துரை** ஊராட்சியில் ஒருவர் எங்களிடம் கடவுள் இல்லை என வாக்குவாதம் பண்ணினார். இயேசு உங்களை நேசிக்கிறார் என்று கூறினோம்.

**மஞ்சக்கோரை** கிராமத்தில் ஒரு பெண் சுகவீனமாயிருக்கும் தன் மகளுக்காக வந்து ஜெபியுங்கள் என்றாள். மகள் ஒரு இந்துகோவில் உள்ளே படுத்திருந்தாள். நாங்கள் இந்து கோவில் உள்ளே சென்று ஜெபித்தோம். அந்தப் பெண் பெலனடைந்து எழுந்து உட்கார்ந்து எங்களுக்கு நன்றி சொன்னாள்.

**நீலாம்பட்டி** கிராமத்தில் ஒருவன் ஓடி வந்து இந்த கிராமத்தை விட்டு போய் விடுங்கள் என விரட்டினான். இந்த நேரத்தில் காற்றும், மழையும் பெய்ய ஆரம்பித்தது. அப்போது நாங்கள் ஒரு ஓலைக் குடிசையில் போய் ஒதுங்கினோம். காற்று பலமாக வீசியதால் பக்கத்திலுள்ள ஒரு மரம் முறிந்து குடிசையின் மீது விழுந்தது. கர்த்தரின் கிருபையால் எங்களுக்கோ, குடிசையில் இருந்தவர்களுக்கோ எந்த தீமையும் ஏற்படவில்லை. குடிசையில் இருந்த அம்மா கிராம ஊழியர்கள் எங்கள் குடிசைக்கு வந்ததால் ஒருவருக்கும் தீங்கும் வராமல் கடவுள் காத்தார் என்று சொன்னார்கள்.

**அப்பணநல்லூர், கொளக்குடி** கிராமங்களில் ஊழியம் செய்தபோது ஒரு வாலிபன் எங்களைப் பார்த்து, நீங்கள் யார் ? எங்கிருந்து வருகிறீர்கள் ? புத்தகங்களை கொடுக்கக் கூடாது என்று தகாத வார்த்தைகளால் பேசி, நாங்கள் கொண்டு போன சுவிசேஷப் புத்தகங்கள், பை இவைகளையெல்லாம் தீ கொளுத்தி விட்டான். சில புத்தகங்களை வாய்க்காலில் பிடுங்கி போட்டு விட்டு எங்களை துரத்தி விட்டார்கள். ஒரு புறமத சகோதரியிடம் சுவிசேஷம் கூறியபோது உங்கள் சர்ச்சுக்கு வர ஆசை. எனக்கு கடன் பிரச்சனை என்றார்கள். ஜெபித்த போது முழுமனதோடு ஏற்றுக் கொண்டார்கள். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக !**

# SRI LANKA VILLAGE GOSPEL MISSION

SLVGM **ஊழிய அறிக்கை . . .** By *Rev.John Isaiah*

**கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து, நாளுக்குநாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.** சங். 96 :3

அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்!**

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவரை ஆராதிக்கவும் , அவருடைய இரட்சிப்பை எல்லா மக்களுக்கும் அறிவிக்கவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆராதனையும், அவரைப் பற்றி அறிவித்தலும் ஒன்றோடொன்று பிணைந்திருப்பது அவசியமாயிருக்கிறது. அவரைப் பற்றி அறிவிப்பதற்கு நாம் எவ்வளவு அதிகமாய் தேவனிடத்தில் காத்திருக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் இயேசுவின் அன்பைப் பற்றி மற்றவர்களிடத்தில் தைரியமாய் சொல்ல முடியும்.

மே மாதம் 18 ம் தேதி 1996ல் கொழும்பு ஒல்வெண்டால் சபையில் SLVGM ஆரம்பிக்கப்பட்டது. அதிலிருந்து 73 கிளை செயலகத்தில் 100–கிராம ஊழியம் செய்யபட்டு சுமார் 3000 கிராமங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

சமீபத்தில் உள்நாட்டு யுத்தம் காரணமாக கிராமங்களுக்குள்ளாக சென்று ஊழியம் செய்வது குறைவாக காணப்பட்டது. யுத்தம் இல்லாத அமைதியான சூழ்நிலையில் கிராம ஊழியம் மறுபடியுமாக ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் தங்கள் இருதயங்களிலும், மனதிலும் உண்மையான சமாதானத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தனர். ஆதலால் சீக்கிரத்தில் இந்த சூழ்நிலை மாறுவதற்கு முன்பாக சுவிசேஷத்தை அறியாத கிராமங்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தது.

## *சமீபகால ஊழியங்கள் :*

இந்த வருடத்தின் ஆயத்தத்திற்காக ரட்னாபுராவில் ஜனவரி 27 முதல் 29 வரை போதகர்களுக்கான கூடுகை மூன்று நாட்கள் நடைபெற்றது. மார்ச் 12ம் தேதி A.O.G. சபை ரட்னாபுராவில் விசுவாசிகளுக்கு சுவிசேஷக் கூடுகை நடைபெற்றது. எங்கள் தேசத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல தேவன் போதகர்களுக்கும், விசுவாசிகளுக்கும் திறந்த மனதையும், இருதயத்தையும் கொடுத்தார்.

சில நாட்களுக்கு பிறகு மூன்று நாட்கள் 100–கிராம ஊழியத்தை Eheliyagoda Baptist திருச்சபையில் 2011 மார்ச் 28 முதல் 30 வரை நடைபெற்றது. தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த ஊழியத்தில் Baptist திருச்சபை, கல்வாரி சுவிசேஷ திருச்சபை, Foursquare திருச்சபை மற்றும் நியூலைப் திருச்சபையிலிருந்து 43 தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொண்டார்கள். மொத்தம் 8,800 கைப்பிரதிகளும், 800 சுவிசேஷப் புத்தகங்களும் கிராமங்களில் வழங்கப்பட்டது.

2011 ஏப்ரல் 15 முதல் 17 வரை கோடைக்காலத்தில் கைப்பிரதி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றை 30 தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டு Nuwera Eliya வில் நடத்தினோம். 300 சுவிசேஷப் புத்தகங்கள், 7797 கைப்பிரதிகள் விநியோகித்தோம்.

2011 ஏப்ரல் 28 முதல் 30 வரை Anglican Church, Karapincha வில் நடந்த 100–கிராம ஊழியத்தை Foursquare திருச்சபை( Kuruwita)யைச் சார்ந்த **பாஸ்டர் லாரன்ஸ்** அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள். Anglican Church, Foursquare திருச்சபை மற்றும் நியூலைப் திருச்சபையிலிருந்து 22 தன்னார்வ போதகர்களும்

விசுவாசிகளும் கலந்து கொண்டார்கள். பலத்த இடி, மழை எதையும் பொறுட்படுத்தாமல் தன்னார்வத் தொண்டர்கள் சந்தோஷமாகவும், தைரியமாகவும் 200 சுவிசேஷப்புத்தகங்களையும், 1800 கைப்பிரதிகளையும் வழங்கினார்கள். இயற்கை சூழ்நிலைகள் சாதகமாக இல்லாததினால் 700 சுவிசேஷப் புத்தகங்களையும், 5500 கைப்பிரதிகளையும் உள்ளூர் சபைகளுக்கு இந்த ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படி கொடுத்தோம்.

### *மிஷனெரி கூடுகை:*

2011 மே 16 முதல் 19 வரை Symrna Mission Centre- Nuwera Eliya வில் போதகர்களுக்கும் , தன்னார்வத் தொண்டர்களுக்கும் SLVGM Missionary Conference நடத்தப்பட்டது. நாங்கள் 150 பேர் கலந்துகொள்வார்கள் என எதிர் பார்த்தோம். ஆனால் Anglican, Baptist, AOG, New Life, Foursquare, Smyrna, Maranatha, and other independent churches from Batticaloa, Puttalam, Colombo, Kandy, Galle, Ratnapura, Eheliyagoda, and upcountry ஆகிய சபைகளின் சார்பில் 92 பேர் கலந்துகொண்டனர்.




உறையாற்றின சிறப்பு விருந்தினர்கள்.

**SLVGM Conference**




Founder & Patron Bro. P.T. Christopher & Rev. J.A. Isaiah – Secretary அவர்களோடு SLVGM Committee உறுப்பினர்கள்



Ven.Nimal Wickremaratne அவர்களின் 25 ஆண்டு சேவைக்காக கௌரவப்படுத்ததல்



Bro. P.T. Christopher அவர்கள் SLVGM 15-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு கௌரவப்படுத்தப்பட்டார்.



15வது ஆண்டுவிழா கொண்டாட்டம்



கலந்து கொண்டவர்கள்

சகோ. P.T. கிறிஸ்டோபர் ( TVGM ஸ்தாபகர், திருச்சி , Patron SLVGM ) , Ven. Nimal Wickramaratne ( Chairman SLVGM), பாஸ்டர் கைவல்யம் டேவிட் (AJC Ministries, Pudukkottai ), பாஸ்டர் அந்தோணிசில் ஆபிரகாம் ( லண்டன் ), பாஸ்டர் Shanthalal De Alwis (AOG, Kurunagela) , Prof. P.V.G. Somaratne (CTS)மற்றும் Rev. ஐசாயா ஆகியோர் Conference ஐ சிறப்பித்தார்கள். இந்த நாள் SLVGM ன் 15வது ஆண்டுநிறைவு நாளாக இருந்ததால் இந்த Missionary Conference மிகவும் குறிப்பிடத்தக்கது. 2011 மே 18 அன்று SLVGM ஊழியங்களின் ஆண்டுவிழாவிற்கான ஸ்தோத்திரக் கூட்டம் நடைபெற்றது. இந்த Conference ஆசீர்வாதமாக இருந்தது. இதில் கலந்து கொண்ட அனைவரும் தேவனுடைய தொடுதலை உணர்ந்தார்கள். அதோடு இந்த தேசத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல உற்சாகப்படுத்தப்பட்டனர்.

## சமீபத்தில் நடந்த 100-கிராம ஊழியங்கள் :

2011 ஜுன் 2 முதல் 4 வரை Rev. Russell Fernando, Presbyter-AOG, அவர்கள் 100–கிராம ஊழியத்தை ஒழுங்கு செய்தார்கள். Ceylon Every Home Crusade ஸ்தாபனம் பெரிய அளவில் Jaffna peninsula முழுவதும் கைப்பிரதி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றை 2011 ஜுலை 8 முதல் 22 வரை நடத்தவுள்ளனர். அந்த நிகழ்ச்சியில் SLVGM பங்கு பெற அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

Batticaloa, Vavuniya, Kalawana, Kiriella, and Galle ஆகிய இடங்களில் 100– கிராம ஊழியங்கள் நடத்த திட்டங்கள் தீட்டப்பட்டு வருகிறது.

## மாரநாதா சிறுவர் இல்லம் :

2011 கர்த்தருடைய கிருபையால் சிறுவர் ஊழியங்கள் எந்த தடையுமின்றி சில ஊழியர்களைக் கொண்டு நடந்து வருகிறது. தற்சமயம் 7 சிறுவர்களும், 19 சிறுமிகளும் இருக்கின்றனர். சகோ. P.T. கிறிஸ்டோபர் அவர்கள் ( TVGM ஸ்தாபகர் – திருச்சி & Patron SLVGM ) சிறுவர் இல்லத்தை சந்தித்து சிறுவர்களோடு ஒரு நாளை கழித்தார்.

மாரநாதா சிறுவர்களோடு
சகோ. P.T. கிறிஸ்டோபர்



சிறுவர்களுக்கு உணவு கொடுப்பதில் எங்களுக்கு எந்தவொரு கஷ்டமும் இல்லை. ஆனால் கட்டடங்களையும், மற்ற காரியங்களையும் பராமரிக்க கடினமாக உள்ளது. ஆண்கள் சிறுவர் இல்லம் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. தேவனுடைய பிள்ளைகளின் உதவியோடு இந்த கட்டடத்தைப் புதுப்பிக்க விரும்புகிறோம். Hatton என்ற இடம் ஈரமான நிலத்தில் பரவியுள்ளதால் மழைக் காலங்களில் பள்ளிகளுக்கு மற்றும் சபைக்கு செல்ல பிள்ளைகள் அவதிப்படுகின்றனர். ஆதலால் பிள்ளைகளின் போக்குவரத்துக்கு ஒரு வாகனம் தேவைப்படுகிறது.

## துதியுங்கள் :

➢ கடந்த 15 ஆண்டுகள் தேவனுடைய நடத்துதலுக்காகவும், கிருபைக்காகவும் தேவனைத் துதியுங்கள்.

➢ மிஷனெரி கூடுகை ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக தேவனைத் துதித்து நன்றி செலுத்துங்கள்.

## ஜெபியுங்கள் :

➢ அநேக கிளை செயலகங்களில் 100–கிராம ஊழியங்கள் நடைபெற தேவனுடைய கிருபைக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் ஜெபியுங்கள்.

➢ 100–கிராம ஊழியங்களை நடத்த தேவன் பொருளாதார வாசலை திறக்க ஜெபியுங்கள்.

➢ 24 மணி சங்கிலி ஜெபம் நடைபெற அதிகமான ஜெபவீரர்களை தேவன் எழுப்ப ஜெபியுங்கள்.

SLVGM ஊழியங்களுக்காக நீங்கள் செய்து வரும் ஜெபங்களுக்காகவும், ஆதரவுகளுக்காகவும், உதாரத்துவமான காணிக்கைகளுக்காகவும் நன்றி செலுத்துகிறோம்.

காணிக்கைகளை SLVGM மற்றும் MCH பெயரில் அனுப்பலாம்.

## காணிக்கை அனுப்பும் விபரம்

**Bank Detail**

| Maranatha Children Home | Sri Lanka Village Gospel Mission |
|---|---|
| A/C No. 186100107516451 (General purpose) (Savings) | A/C No. 015020242136 |
| A/C No. 186100297516451 (Educational purpose)(Current) | A/C No. 015010013698 |
| People's Bank, Hatton | Hatton National Bank, Hatton |

**For further information please contact:**

- The Ven. Nimal Wickramaratne (Chairman) +94 725898529
- Mrs. Sheila De Soysa (Treasurer) +94 522235290
- Rev. J.A. Isaiah (Secretary) +94 774071693

**Contact Detail : Sri Lanka Village Gospel Mission**
**124/3, Nursing Home Road, Hatton, Sri Lanka.**

**Bro. P.T. Christopher** (Founder/Patron – TVGM/SLVGM)
**Bro. Stephen Christopher** (Managing Trustee)
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**100-VILLAGE,**
**SOMARASAMPETTAI, TRICHY - 620 102. INDIA.**
**Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445 , 94435 44628**
**Email : 100village@tvgm.org Web: www.tvgm.org**

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குள்ள சகல ஜாதி களுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்பொழுது முடிவு வரும். **மத்.24:14**

## உங்கள் பங்கு என்ன ?

**யோவான் சுவிசேஷப் புத்தகம்**
**தேவை ரூ. 400,000 ( 4 லட்சம் )**

கர்த்தருடய கிருபையினால், IBL சென்னை நிறுவனத்தார் TVGMக்கு 400,000 யோவான் சுவிசேஷப்புத்தகம், மிக சலுகை விலையில் சுலபமான தவணையில் தந்து உதவியுள்ளார்கள்.

இந்தப் பணத்தை மாதந்தோறும் ரூ.40,000 வீதம், 10 தவணையாக 31.3.2012க்குள் நாம் செலுத்தி முடிக்க வேண்டும். ஜெபியுங்கள்

கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் உங்கள் காணிக்கைகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்து உதவுங்கள்.

**Tamil Village Gospel Mission**
**Canara Bank,**
**Puthur , Bank Code : 01249**
**Trichy - 620 017.**

**இந்தியர்கள்** அனுப்ப வேண்டிய முறை
SB A/c No : **12491010 - 23822**

**வெளிநாட்டவர்** (Foreigners)
அனுப்ப வேண்டிய முறை :
SB A/c No : **12491010 - 11947**

**குறிப்பு :**

நீங்கள் காணிக்கை அனுப்பும்போது உங்கள் முழுமுகவரி, தொகை, நோக்கம் யாவையும் குறிப்பிட்டு
**Email : 100village@tvgm.org**
மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.
( தொடர்பு முகவரி : **16 வது பக்கம்** )

## ஜெபவீடு கட்டுமான தேவை

புதுக்கோட்டை மாவட்டம் **குளவாய்பட்டி** கிராமத்திலும், திருச்சி – துவாக்குடி அருகிலுள்ள கிராமத்திலும் **ஜெப வீட்டை கட்டி முடிப்பதற்கு** உதவி செய்வதாக நாங்கள் வாக்குக் கொடுத்து 2010ல் TVGM மூலம் பாதி பணம் கிராம ஊழியருக்கு கொடுத்தோம்.

ஆனால் 2 ஜெபவீட்டையும் பொருளுதவியினால் தாங்க இது வரையிலும் ஒருவரும் முன்வர வில்லை. ஜெபியுங்கள்.

21 ஜெபவீடு கட்டுமான பணிகளை நாங்கள் பார்வையிட்டு , போட்டோக்களை பத்திரிகையில் வெளியிட்டும், பொருளுதவியால் தாங்க ஒருவரும் முன்வரவில்லை.

ஆதலால் ஜனவரி 2011 முதல் ஒருவரும் **ஜெபவீடு கட்டி முடிக்க** விண்ணப்பிக்க வேண்டாம் என தெரிவித்து வருகிறோம்.

## 2011 ஜுலை மாத
## இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : **வேலூர்**
யூனியன் : **கணியம்பாடி**
நாள் : 23.07.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் J. இன்பநாதன்**
**ஏலீம் ஏ.ஜி. சர்ச்**
**15, முல்லை நகர்,**
**சீனிவாசா கல்யாண**
**மண்டபம் பின்புறம்,**
**ஓட்டேரி,**
**வேலூர் - 632 002.**
**செல்: 94423 07830**

## TVGM **சிறுவர் இல்லம்.**

## 70 பிள்ளைகளின் பள்ளிக்கூட தேவை ரூ.80,500

2010–2011 கல்வியாண்டில் அனைத்து பிள்ளைகளும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஜெபித்த, கொடுத்த, நேரடியாக பார்வையிட்ட அனைவருக்கும் நன்றி. தேவனுக்கே மகிமை.

2011 – 2012 கல்வியாண்டிற்கு நமது 70 பிள்ளைகளுக்கும் உத்தேசமாக ரூ.**80,500** தேவைப்படுகிறது.

***ஸ்கூல் பீஸ் - ரூ.600 X 70பேர் = ரூ.42000***

***நோட்புக் - ரூ.250 X 70பேர் = ரூ.17500***

***யூனிபார்ம் - ரூ.300 X 70பேர் = ரூ.21000***

சராசரியாக 1 பிள்ளைக்கு ரூ. 1150

குறிப்பு : 1. குண்டல் இல்லத்திற்கு திரு. ரத்தினம் ஆசிரியர்,திரு.மனோகர் ஆசிரியர் மூலமும், தலைமை அலுவலக E- mail- ஐ பார்வையிட்டு சோமரசம்பேட்டை இல்லத்திற்கு உதவி செய்தவர்களுக்கும் நன்றி.

2. எல்லாப் பிள்ளைகளையும் நாங்கள் சமமாக எண்ணுவதால் ஒவ்வொரு தேவைகளும் கூடுதல் குறைவாக சந்திக்கப்பட்டாலும் TVGM சிறுவர் இல்ல ஒழுங்குபடி எல்லாப்பிள்ளைகளுக்கும் எல்லா தேவைகளும் சந்திக்கப்பட பகிர்ந்து அளிக்கிறோம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஏலீம் சிறுவர் இல்லம் - 8 கழிவறை, 8 குளியலறை தேவை**

ஒரு அறையின் குறைவேலைகள் முடிவடைய ரூ. 7000 தேவை.

கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் உங்கள் காணிக்கைகளை பின்வரும் முகவரிக்குஅனுப்பி வைத்து உதவுங்கள்.

**Tamil Village Gospel Mission Social Service**
**Canara Bank, Puthur , Bank Code : 01249, Trichy - 620 017.**

**இந்தியர்கள்** அனுப்ப வேண்டிய முறை
SB A/c No : **12491010 - 23805**

**வெளிநாட்டவர்** (Foreigners) அனுப்ப வேண்டிய முறை :
SB A/c No : **12491010 - 24967**

**குறிப்பு:** நீங்கள் காணிக்கை அனுப்பும்போது உங்கள் முழுமுகவரி, தொகை, நோக்கம் யாவையும் குறிப்பிட்டு **Email : 100village@tvgm.org** மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

( தொடர்பு முகவரி : **16 வது பக்கம்** )

# ஒரிஸாவை நேசியுங்கள் !
# ஒரிஸாவிற்காக ஜெபியுங்கள் !

## விசுவாசத்தினால் 100,000 ஒரியா கைப்பிரதிகள் விநியோகித்தல்

## ஒரே நாள் / 200 ஊழியர்கள் / 100 மையங்கள்

கர்த்தருக்குச் சித்தமானால் ஒரு சில மாதங்களில் ஒரிஸா மாநிலத்திலுள்ள குறிப்பிட்ட மாவட்டங்களில் 100 பஞ்சாயத்துகளை மையமாக வைத்து, ஒரு மையத்திற்கு இரண்டு ஊழியர்கள் வீதம் அனுப்பி ஒவ்வொரு குழுக்களும் 1000 பேருக்கு சுவிசேஷ கைப்பிரதிகள் இலவசமாக வழங்க ஜெபித்து திட்டமிட்டு ஒழுங்கு செய்து வருகிறோம்.

இந்த சுவிசேஷப் பணியை ஒழுங்கு செய்ய பாஸ்டர் சுரேந்திரக்குமார் **Orissa Village Gospel Mission - Managing trustee** அவர்களிடம் சகோ. P.T. கிறிஸ்டோபர் வேண்டுகோள் கொடுத்துள்ளார்.

1. இதற்கு தேவையான வாகனவசதி, ஆள்வசதி, பொருளாதார வசதி இயற்கை அநுகூலங்கள் யாவையும் கர்த்தர் கட்டடையிட ஜெபியுங்கள்.
2. அரசாங்க அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், பொதுமக்கள் கண்களில் கர்த்தர் தயவை கட்டளையிட ஜெபியுங்கள்.
3. சகோ. ஸ்டீபன் , சகோ. P.T. கிறிஸ்டோபர் இருவரும் இணைந்து இதை செயல்படுத்த போதிய கிருபைகளை கர்த்தர் கட்டளையிட ஜெபியுங்கள்.

# கன்னியாகுமரி மாவட்ட
# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2011 மே மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மே மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. முதல் வாரம் திருச்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற **32வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக்கூட்டத்தில்** யாவரும் கலந்து கொண்டு தேவனை ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்தினோம். இரண்டாவது வாரத்திலிருந்து எங்களது அனுதின ஊழியங்களை தொடர கர்த்தர் உதவி செய்தார். தலைமை அலுவலகத்திலிருந்து எங்களுக்கு வாங்கிக் கொடுத்த வாகனம் ஊழியப் பாதையில் மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது. 5 குழுவாக ஒரே திசையிலுள்ள ஏரியாக்களை சந்தித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். சுவிசேஷ ஊழியங்கள் தடையின்றி நடைபெற்றன. ஜூலை மாத 100–கிராம ஊழியம் **முஞ்சிறை யூனியனில்** நடத்துவதற்கு இட ஒழுங்குகளை ஜெபத்துடன் கவனித்து வருகிறோம். **“கர்த்தர் எங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார்”**


கிறிஸ்துவின் பணியில்,
N. **ஷோபனா இவான்சலின்.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
செல்: **98658 26424**

**தலைமை அலுவலகம் : 0431 - 2607241**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

**"நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது". தானி. 9:23**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** **பரிசுத்தம்**

ஊழியக்காரர்கள், விசுவாசிகள், தலைவர்கள் மற்றும் நம் குடும்பங்களில், ஜெபக்குழுக்களில் **பரிசுத்தம்** காணப்பட ஜெபியுங்கள்.

**"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லையே"**

**செவ்வாய்:** **கடன்**

ஸ்தாபனங்கள், ஊழியர்கள், விசுவாசிகள், தன்னார்வ தொண்டர்கள் மத்தியில் **கடன் இல்லாத வாழ்க்கை** காணப்பட ஜெபியுங்கள்.

**"அன்பு கூறுகிற கடனேயல்லாமல் வேறொன்றிலும் கடன்பட வேண்டாம்"**

**புதன் :** **வியாதி**

ஊழியத்தலைவர்கள், மிஷனெரிகள், உதவி ஊழியர்கள், விசுவாசிகளை **வியாதி** தாக்காதபடி ஜெபியுங்கள்.

**"வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்"**

**வியாழன் :** **பிசாசு**

பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் கிரியைகள் ஊழியரையோ, ஊழியங்களையோ, விசுவாசிகளையோ, தொடாதபடி ஜெபியுங்கள்.

**"பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே, தேவகுமாரன் வெளிப்பட்டார்"**

**வெள்ளி :** **சித்தம்:**

ஊழியர்களும், விசுவாசிகளும், தலைவர்களும் தேவ சித்தத்திற்காக காத்திருந்து ஜெபிக்கவும், தேவ சித்தத்தை செய்வதில் வாஞ்சையாக இருக்கவும் ஜெபியுங்கள்.

**"தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்"**

**சனி :** **கிருபை**

ஊழியர்களும், விசுவாசிகளும், தலைவர்களும் தங்கள் சுய கிரியைகளை நம்பாதபடி தேவனுடைய கிருபைக்காக காத்திருக்கும்படி ஜெபியுங்கள்.

**"என் கிருபை உனக்குப் போதும்"**

**ஞாயிறு :** **ஆவியின் வரங்கள் ஆவியின் கனிகள்**

ஊழியர்கள், விசுவாசிகள், தலைவர்கள் ஆவியின் வரங்கள் கனிகளுக்காக ஏங்கி நிற்கவும் தேவனுடைய மகிமைக்காக செலவு செய்யவும் ஜெபியுங்கள்.

**"மரம் நல்லதோ, கெட்டதோ என்று அதின் கனியினால் அறியப்படும்"**

**TVGM தலைமை அலுவலக முகவரி**
BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
TAMIL VILLAGE GOSPEL MISSION
1OO-VILLAGE,
Veeranginallur Road,
SOMARASAMPETTAI ( Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445 Email :
100village@tvgm.org

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர், M.O அனுப்ப வேண்டிய முறை**

1.TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
2. T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

பின்ரும் 2 Trust களுக்கு மட்டும் 80G வரி விலக்கு உண்டு.

1. T.V.G.M. SOCIAL SERVICE சிறுவர் இல்லம், ஏழை, எளியவர்கள் உதவி
2. TASOL ( நிலம் வாங்குவதற்கும் மற்றும் கல்வி நிதி )

குறிப்பு :Bank Account நம்பர் தேவைப்பட்டால் தயவுசெய்து உங்கள்

**குறிப்பு :Bank To Bank அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கை அனுப்புவதின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.**

**Website : www.tvgm.org**

தினசரி வாக்குத்தத்தம், மாதாந்திர வாக்குத்தத்த செய்தி ,**'100 கிராம ஊழியம்'** அனுபவ சாட்சிகள், TVGM Documentary, TVGM சிலுவைக்கொடி பாடல்கள், மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.
**தவறாமல் பாருங்கள் ! ஜெபியுங்கள் !**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011

Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM 25+7 = 32 வது ஆண்டு நிறைவுவிழா












To

Return Requested: TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.